சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **114 / 2013**

பெயர்: முத்துசாமி பி.வா.சா.1 தேதி **24.11.2025**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது தகப்பனாருக்கு இரண்டு மனைவிகள். முத்தம்மாள், பெரியக்காள். மேற்படி முத்தம்மாளுக்கு யார் வாரிசு என்றால் நான், மாரியாயி, சந்தானம் ஆகியோர்கள் வாரிசுகள். மேற்படி பெரியக்காளுக்கு வீரமுத்து, மீனாட்சி, மணி ஆகியோர்கள் வாரிசுகள். என்னுடைய பெற்றோர்கள் தற்பொழுது உயிருடன் இல்லை. மேற்படி பெரியக்காளின் வாரிசுகள் தற்பொழுது யாரும் உயிருடன் இல்லை. வழக்கு தாக்கல் செய்த எனது சகோதரர் சந்தானமும் தற்பொழுது உயிருடன் இல்லை. எதிர்வழக்குரைக்கு யார் விவரம் சொன்னார் என்றால் நான் தான் சொன்னேன். வழக்கு சொத்துக்கள் எனது தாயார் முத்தம்மாள் பெயரில் தனி கிரையம். எனது தாயார் இறப்பதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி அவ்வாறு பதிவு செய்யப்பட்டதாக கூறக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. எந்தெந்த சொத்துக்களை பொறுத்து எனது தாயார் அப்படி எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனது அம்மா பெயரில் வாங்கிய சொத்து எனது பெயரில் வாங்கிய சொத்து ஆகியவைகளை எழுதிக்கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது பெயரில் சொத்துக்கள் எதுவும் வாங்கியதாக குறிப்பிடாமல் தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் கிரையம் வாங்கியதாக கூறக்கூடிய இரண்டு ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. யாரிடமாவது படித்து காண்பிக்க சென்னேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டாவது மேற்படி ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது தாயார் இரண்டு கிரையம் பத்திரம் மூலமாக கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இரண்டு பத்திரங்களிலும் நான் பணம் கொடுத்து கிரையம் வாங்கியதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. நான் சம்பாதித்து எனது தாயார் பெயரில் கிரையம் வாங்கியதாக கூறுவது

உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் எனது பெயருக்கு சொத்தை எழுதிக்கொடு'த்தாக கூறுவது உண்மையில்லை என்றால்ச ரியல்ல. அவ்வாறு எழுதிக்கொடுத்திருக்கும்பட்சத்தில் அதனை நான் எனது முதல் விசாரணையுடன் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்து எனது தாயார் பெயருக்கு கிரையம் வாங்கியிருப்பதாக சொல்லப்படும் சொத்தினை மீண்டும் நா னே எனது தாயார் பெயருக்கு மறுபயனாக கிரையம் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஆகையால் நான் சொல்லியுள்ள கட்சி உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது தந்தையாருக்கு சொந்த ஊர் பிச்சம்பட்டி.

4. மேற்படி அங்கேயும் சில சொத்துக்கள் எனது தகப்பனார் பெயருக்கு கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் எனது சிறிய தாயாரின் ஆண் வாரிசுகளான இரண்டுபேருக்கு வீடு வகையறா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிச்சம்பட்டியில் இருந்த விவசாய நிலம் இரண்டு மனைவிகளின் ஆண் வாரிசுகளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் எனது தகப்பனார் பெயரில் தான் உள்ளது. எனது தாயார் எனது பெயருக்கு பதிவு செய்யப்படாத ஆவணத்தை பிறப்பித்துக்கொடுத்தாக கூறக்கூடிய ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயருக்கு பட்டா எதுவும் மாறவில்லை என்றால் சரிதான். தற்பொழுதும் எனது தாயார் பெயரில் உள்ளதா என்றால் எனது தாயார் விற்பனை செய்ததாக கூறக்கூடிய நபரின் பெயரிலும் உள்ளது. தாவா சொத்துக்களை நான் அனுபவம் செய்துவருவதாக கூறுவது வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

5. எனது மனைவின் நகைகளை அடகு வைத்து குத்தகைக்கு பாடுபட்ட விவசாய நிலத்தினை எனது தாயார் பெயரில் கிரையம் பெற்றதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எனது மனைவியின் நகைகளை அடகு வைத்து கிரையம் பெற்றிருந்தால் அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்களை குத்தகைக்கு எடுத்து அனுபவம் செய்து வருகிறேனா என்றால் இல்லை. சொத்து ஒன்றை குத்தகைக்கு அனுபவம் செய்யும் சமயத்தில் குத்தகைதாரராக இருக்கக்கூடிய நபர் பெயருக்கு அரசாங்கத்தால் பயிர் கடன், உர மானியம் வழங்கப்படும் என்றால் சரிதான். எனவே, தாவா சொத்துக்களை மேற்குறிப்பிட்டுள்ள அரசு பயன்களில் அனுபவித்து வருவதால் மட்டும் தாவா சொத்து

எனக்கு மட்டும் சொந்தம் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்துக்கள் எனது தாயார் (முத்தம்மாள்) பெயரில் நாளது தேதிவரை இருந்தப்படியால் பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

6. ஆகையால் தான் எனது சகோதரர் எனது பெயரில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிச்சம்பட்டியில் உள்ள சொத்துக்களை பாகம் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் வழக்கு சொத்தானது எனது தாயார் பெயரில் இருந்ததால் தான் பாகம்பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனது சிறிய தாயாரின் வாரிசுகளுக்கு உரிமையில்லை என்பதால் தான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2025.11.24 17:44:21 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.